**உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உள்ளூராட்சி சேவைகள் கட்டளைச் சட்டத்தின் (264 ஆம் அதிகாரம்) 62 ஆம் பிரிவு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் மறுப்பு அபிப்பிராயமொன்றை வெளியிடுகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த

வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதியத்தால் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுகளுக்காக மற்றும் மீளாய்வாண்டிற்காக பெறப்பட்டிருந்த பங்களிப்புத் தொகை ரூபா 77,965,865 காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதியத்தின் பயனாளிகளுக்கு மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு 2011 ஆம் ஆண்டு முதல் கிரமமாக குறைவடையும், தற்போது செயலிழந்த நிலையில காணப்படும் இந்த நிதியத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருக்காததால் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அட்டுறு அடிப்படையில் சீர்செய்யப்படமாட்டாது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம், வருமானச் செலவினங்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் நிதியேற்பாட்டினை பயன்படுத்தி 2023 ஆம் ஆண்டின் ஓய்வுபெற்றவர்களுக்கு ரூபா 932,929,839 ஆன பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருந்தது. உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து ஆண்டினுள் பங்களிப்பு பண பெறுவனவு ரூபா 77,965,865 ஆக காணப்பட்டதுடன், ஓய்வூதிய நிதியத்திலிருந்து கொடுப்பனவுகளாக அந்த தொகை பங்களிப்பு பணப் பெறுவனவிற்கு எதிராக கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் கணக்குகளில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிராததுடன், அந்த பணத்தில் ரூபா 16,701,878 தொகை கடந்த வருடங்களுக்கு உரிய பெறுவனவுகள் ஆன போதிலும், மாற்றல்களாக வருமான செலவினக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது. | குறிப்பு 02 இன் இலக்கம் 03 இன் கீழ் கணக்கு பதிவொன்றாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. | வருமான செலவின கணக்கின் பங்களிப்பு பணப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளின் பெறுபேறு காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2018 பெப்ரவரி 12 ஆந் திகதி காசோலையொன்றின் மூலம் அனுப்பப்பட்ட ரூபா 858,060 தொகையான பங்களிப்பு பணம் உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு பதிலாக விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தால் அந்த பெறுமதியால் பெற வேண்டிய பங்களிப்பு பண மீதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | புதுக்குடியிருப்பு பிரதேச சபையிலிருந்து கிடைத்த மேவுகைக் கடிதத்தில் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு என மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தால், அந்த காசோலை விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய மாகாண தலைப்பின் கீழ் செலவு வைக்கப்பட்டுள்ளது என்பது. | சரியான கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | ஒத்த அறிக்கைக ளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | பெற வேண்டிய பணம் | 835,735,244 | 114,383,538 | 721,351,706 | 2023 திசெம்பர் மாதம் அனுப்பப்பட்ட காசோலைகள் 2024 சனவரி மாதம் கிடைத்த காரணத்தால் 2023 திசெம்பர் மாதம் கணக்கு வைக்கப்படாத காரணத்தால் இந்த வேறுபாடு ஏற்பட்டது என்பது. | மீதி உறுதிப்படுத்தல் மூலம் பெற வேண்டிய பங்களிப்பு பணத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய பங்களிப்பு பணம் | 50,516,885 | 59,725,510 | 9,208,625 | 2023 ஆம் ஆண்டின் இறுதி மூன்று மாதங்களுக்குரிய மரண அகற்றல்கள் 2023 திசெம்பர் மாத பட்டியலில் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன், இது தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறிவித்தல் 2024 சனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் உள்ளூராட்சி சேவைகள் நிதியத்தின் கணக்கின் பிரகாரம் 2023.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி குறைத்து காண்பிக்கப்பட்டது என்பது. | மீதி உறுதிப்படுத்தல் மூலம் பெற வேண்டிய பங்களிப்பு பணத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பெற வேண்டிய பங்களிப்பு பணம் | 74,922,370 | மீதி உறுதிப்படுத்தல்கள் | மாதாந்த பட்டியல்கள் மூலம், அந்தந்த நிறுவனங்கள் செலுத்த வேண்டிய பணம் குறித்து காலாண்டுக்கு ஒரு அறிவிப்பு செய்யப்படுவதுடன் இதுவரை எந்த நிறுவனத்தினாலும் செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகையில் மாற்றம் இருப்பதாக எந்த அறிவிப்பும் செய்யப்படவில்லை. | நிலுவைத் தொகையைச் சரிபார்ப்பதன் மூலம் பெறப்படும் பங்களிப்பு பணத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 303 உள்ளூராட்சி நிறுவனங்களில் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்படியாக பெற வேண்டிய பங்களிப்பு பண மீதி ரூபா 1,073,077,382 ஆக காணப்பட்டதுடன், அவற்றுள் 2023 ஆம் ஆண்டின் பங்களிப்புப் பணம் கிடைக்காத உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 81 ஆகும். உரிய நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய பங்களிப்பு பண மீதி ரூபா 284,259,658 ஆகும். | உள்ளூராட்சி நிறுவனங்களின் உத்தியோகத்தரகளை தொடர்பு கொண்டு செலுத்த வேண்டிய நன்கொடைகளை வசூலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், நிலுவையில் உள்ள பங்களிப்புகளை சரியான முறையில் செலுத்துவது அந்த நிறுவனங்களின் அடிப்படைப் பொறுப்பாகும். | பெற வேண்டிய பங்களிப்புகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

1.7 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 யூலை 29 ஆந் திகதிய 07/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2016 ஆம் ஆண்டின் பாதீட்டு இலக்கம் 425 மற்றும் 426 இன் மூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு இணங்க அனைத்து நியதிச் சட்ட மற்றும் நியதிச்சட்டமல்லாத நிதியங்களை பாராளுமன்றத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ளமையை சான்றுபடுத்தும் பொருட், பொது திறைசேரியால் 2016 யூன் 11 ஆந் திகதி விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், இந்த குழுவினால் இந்த நிதியத்திற்கு உரிய சட்டங்கள் திருத்தப்பட்டு மூடப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் தீர்மானம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பில் தீர்மானமொன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், இந்த அறிக்கையின் நிலுவை பங்களிப்பு பணத்தை உரிய நிறுவனங்களிலிருந்து துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரையும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொது திறைசேரியால் நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் 2017 மார்ச் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட குழு அறிக்கையின்படி, உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியம் உள்ளிட்ட நிதியங்கள் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் மூடப்பட வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் வழங்கப்படுவது தொடர்பான எந்தவொரு கொள்கை முடிவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. | நிதியத்தை மூடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்து, நிலுவைத் தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

2. **நிதி மீளாய்வு**

2.1 **நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 16,701,878 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 27,070,918 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 10,369,040 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பங்களிப்பு பணம் குறைவடைந்தமை முக்கியமான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு திறமையீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் 04 ஓய்வூதியதாரர்கள் 2016 அக்டோபர் மற்றும் 2022 ஏப்ரல் காலப்பகுதியில் மரணமடைந்துள்ளதுடன், 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அவர்களின் பெயர்கள் உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதியதாரர்கள் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்படவில்லை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பங்களிப்பு பணம் சேகரிக்கப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து இறப்புச் சான்றிதழ்களைப் பெற்று சரிபார்த்த பிறகு, உள்ளாட்சி சேவை ஓய்வூதியம் பெறுவோர் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இறப்புகளை சரியான நேரத்தில் இனங்காணப்பட்டு பெயர் பட்டியல்கள் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |